| Question Booklet No. : |
|---|
| |

# PTGS/2021

பதிவு எண் | | | | | | | | | | |

## 2021

# பொது அறிவு

## (பட்டப்படிப்புத் தரம்)

கால அளவு : இரண்டு மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 200

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக உங்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, **100** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்கத் தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். **வினாத் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.**
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
5. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும். விடைகளைக் குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்கத் தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். **உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும்.** எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
8. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
9. **குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.**
10. அனைத்து இனங்களிலும் ஆங்கில வடிவே இறுதியானது.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்றத் தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

ENGLISH VERSION OF THE ABOVE INSTRUCTIONS ARE PROVIDED ON THE BACKSIDE OF THIS BOOKLET

SEAL

SPACE FOR ROUGH WORK

1. Who was acclaimed as the "Diamond of India", due to his invaluable services to the Nation?

(A) Gopala Krishna Gokhale
(B) Bala Gangadhar Tilak
(C) Sardar Vallabhai Patel
(D) Lala Lajpat Rai
(E) Answer not known

விலைமதிப்பற்ற சேவைகளால் இந்தியாவின் வைரமாக பாராட்டப்பட்டவர் யார்?

(A) கோபால கிருஷ்ண கோகலே
(B) பால கங்காதர் திலகர்
(C) சர்தார் வல்லபாய் பட்டேல்
(D) லாலா லஜ்பத்ராய்
(E) விடை தெரியவில்லை

2. Kamaraj was elected as the Chairman of Virudhunagar Municipality in 1941 when he was in

(A) Vellore Jail
(B) Palayamkottai Jail
(C) Virudhunagar Jail
(D) Madras Jail
(E) Answer not known

1941-ஆம் ஆண்டு விருதுநகர் நகராட்சி தலைவராக காமராஜர் தேர்ந்தெடுக்கப்பட்ட போது அவர் இருந்த இடம்

(A) வேலூர் சிறை
(B) பாளையங்கோட்டை சிறை
(C) விருதுநகர் சிறை
(D) மெட்ராஸ் சிறை
(E) விடை தெரியவில்லை

3. The policy of British rule in India was

(A) Castless Society

(B) Unity in Diversity

(C) Open Door Policy

(D) Divide and Rule

(E) Answer not known

இந்தியாவில் ஆங்கிலேயர்கள் பின்பற்றிய கொள்கை

(A) சாதியற்ற சமுதாயம்

(B) வேற்றுமையில் ஒற்றுமை

(C) திறந்தவெளிக் கொள்கை

(D) பிரித்தாளும் கொள்கை

(E) விடை தெரியவில்லை

4. Why did Nana Sahib develop a grudge against the British?

(A) No Successor

(B) Not a good administrator

(C) His pension rejected

(D) Traitor

(E) Answer not known

நானா சாகேப் ஆங்கிலேயர்களுக்கு எதிராக மன வெறுப்பை வளர்த்து கொண்டது ஏன்?

(A) வாரிசில்லை

(B) சிறந்த நிர்வாகியல்ல

(C) ஓய்வூதியம் மறுக்கப்பட்டது

(D) துரோகி

(E) விடை தெரியவில்லை

5. More persons are working, what is actually required on land, due to population is called

(A) Disguised unemployment (B) Unemployment

(C) Under employment (D) Over employment

(E) Answer not known

மக்கள்தொகை காரணமாக நிலத்தில் உண்மையில் தேவைப்படுவதை விட அதிகமான நபர்கள் வேலை செய்கிறார்கள். அது —————— ஆகும்.

(A) மறைமுக வேலையின்மை (B) வேலையின்மை

(C) குறை வேலையின்மை (D) நிறை வேலையின்மை

(E) விடை தெரியவில்லை

6. MUDRA provide loans to

(A) Corporate Business (B) Multinational Companies

(C) Small farmers (D) Micro-enterprises

(E) Answer not known

முத்ரா திட்டத்தின் கீழ் கடன்களை பெறுவது

(A) பெரு வணிக நிறுவனங்கள் (B) பன்னாட்டு நிறுவனங்கள்

(C) சிறு விவசாயிகள் (D) நுண் தொழில் நிறுவனங்கள்

(E) விடை தெரியவில்லை

7. Why the 'Rainbow revolution' is so called?

(A) Agricultural revolution

(B) Revolution in Agricultural and Industrial output

(C) IT revolution

(D) Industrial revolution

(E) Answer not known

'வானவில் புரட்சி' என ஏன் அழைக்கிறோம்

(A) வேளாண் புரட்சி

(B) வேளாண் மற்றும் தொழிற் உற்பத்தியில் புரட்சி

(C) தகவல் தொழிற் நுட்ப புரட்சி

(D) தொழிற் புரட்சி

(E) விடை தெரியவில்லை

8. Match the following :

| | | | |
|---|---|---|---|
| (a) | VAT | 1. | Multipoint tax with cascading effect |
| (b) | GST | 2. | One point tax without cascading effect |
| (c) | Sales Tax | 3. | Multipoint tax without cascading effect |
| (d) | CGST | 4. | Collected by the Central Government for Interstate sale |
| (e) | IGST | 5. | Collected by the Central Government on an intra-State sale |

| | (a) | (b) | (c) | (d) | (e) |
|---|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 4 | 5 | 3 |
| (B) | 3 | 2 | 1 | 5 | 4 |
| (C) | 4 | 3 | 1 | 2 | 5 |
| (D) | 2 | 1 | 3 | 5 | 4 |

(E) Answer not known

பின்வருபவனவற்றை பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | VAT | 1. | அடித்தள விளைவுள்ள பல்முனை வரியாகும் |
| (b) | GST | 2. | அடித்தள விளைவில்லாத ஒரு முனை வரியாகும் |
| (c) | விற்பனை வரி | 3. | அடித்தள விளைவில்லாத பல்முனை வரியாகும் |
| (d) | CGST | 4. | மாநில அரசுகளுக்கு இடையேயான விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவதாகும் |
| (e) | IGST | 5. | மாநிலத்திற்குள்ளே நடைபெறுகிற விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவதாகும் |

| | (a) | (b) | (c) | (d) | (e) |
|---|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 4 | 5 | 3 |
| (B) | 3 | 2 | 1 | 5 | 4 |
| (C) | 4 | 3 | 1 | 2 | 5 |
| (D) | 2 | 1 | 3 | 5 | 4 |

(E) விடை தெரியவில்லை

9. Match List I (Article) with List II (Powers of President of India) and choose the correct answer using the options given below :

| List I | | List II | |
|---|---|---|---|
| (a) | Art. 53 | 1. | National emergency |
| (b) | Art. 352 | 2. | Appointment of Prime Minister |
| (c) | Art. 76 | 3. | Executive power of the Union vested with the President |
| (d) | Art. 75 | 4. | Appointment of Attorney General of India |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) Answer not known

(ஜனாதிபதி பற்றிய) பட்டியல் I ஐ பட்டியல் II உடன் ஒப்பிடுக :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| (a) | விதி 53 | 1. | தேசிய அவசர நிலை |
| (b) | விதி 352 | 2. | பிரதமர் நியமனம் |
| (c) | விதி 76 | 3. | மத்திய அரசின் இந்தியாவின் நிர்வாக அதிகாரம் குடியரசுத் தலைவரிடம் உள்ளது |
| (d) | விதி 75 | 4. | இந்திய தலைமை வழக்குரைஞர் நியமனம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

10. Which part of the Indian Constitution envisages a three-tier system of Panchayats?

(A) Part IX
(B) Part X
(C) Part XI
(D) Part XII
(E) Answer not known

இந்திய அரசியல் சாசனத்தின் எந்தப் பகுதி மூன்று நிலை பஞ்சாயத்து அமைப்புகள் நிறுவ வழி வகுக்கின்றது?

(A) பகுதி – IX
(B) பகுதி – X
(C) பகுதி – XI
(D) பகுதி – XII
(E) விடை தெரியவில்லை

11. Consider the following statements relating to the Union Council of Ministers :

I. Article 74 of the Indian Constitution deals with the Council of Ministers

II. It does not have the collective Responsibility.

Of these :

(A) I is true
(B) II is true
(C) I and II are true
(D) I and II are false
(E) Answer not known

மத்திய அமைச்சரவை தொடர்பாக பின்வரும் கூற்றுக்களை ஆராய்க :

I. இந்திய அரசியலமைப்பு விதி 74வது அமைச்சரவையை விளக்குகிறது

II. அது கூட்டுப் பொறுப்பை பெற்றிருக்கவில்லை

இவற்றுள் :

(A) I மட்டும் சரியானது
(B) II மட்டும் சரியானது
(C) I மற்றும் II சரியானது
(D) I மற்றும் II தவறானது
(E) விடை தெரியவில்லை

12. Among of the following statements identify which is not related with the 42nd Amendment of the Indian Constitution?

(A) The word 'Secular' added to the Preamble

(B) The state protects all religions equally

(C) It lays emphasis on secular and socialist aspects

(D) It made changes in the last paragraph of the Preamble

(E) Answer not known

பின்வரும் வாக்கியங்களில் 42வது இந்திய அரசியலமைப்பு திருத்தத்துடன் பொருந்தாத கூற்று எது?

(A) 'சமய சார்பற்ற' என்ற வார்த்தை அரசியலமைப்பு முகப்புரையில் சேர்க்கப்பட்டது

(B) அரசாங்கம் அனைத்து சமயங்களையும் சமமாக பாதுகாத்தது

(C) சமய சார்பற்ற மற்றும் சோஷியலிச என்ற வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது

(D) சில திருத்தங்கள் முகப்புரையில் கடைசி பத்தியில் ஏற்படுத்தப்பட்டது

(E) விடை தெரியவில்லை

13. The custom of female infanticide was very much prevalent among the

(A) Jats

(B) Marathas

(C) Rajputs

(D) Konds

(E) Answer not known

பெண் சிசுக்கொலை வழக்கம் ———— மத்தியில் அதிகமாக இருந்தன.

(A) ஜாட்கள்

(B) மராத்தியர்கள்

(C) இராஜபுத்திரர்கள்

(D) கோண்டு

(E) விடை தெரியவில்லை

14. Who wrote Ain-i-Akbari?

(A) Akbar

(B) Alberuni

(C) Abul Fazl

(D) Todarmal

(E) Answer not known

“அயின்-இ-அக்பரி” என்ற நூலை எழுதியவர் யார்?

(A) அக்பர்

(B) அல்பரூணி

(C) அபுல்பாசல்

(D) தோடர்மால்

(E) விடை தெரியவில்லை

15. Which one of the following was as an important port of the eastern coast during the Gupta period?

(A) Broach

(B) Japara

(C) Tamralipti

(D) Kalyan

(E) Answer not known

குப்தர் காலத்தில் கிழக்கு கடற்கரையில் உள்ள முக்கிய துறைமுகம் யாது?

(A) புரோஜ்

(B) ஜாபரா

(C) தாமிரலிப்தி

(D) கல்யாண்

(E) விடை தெரியவில்லை

16. Which among the following is known to be prime effect of thermal pollution on aquatic systems?

(A) decrease in dissolved oxygen

(B) increase in toxins

(C) makes unfit for use

(D) increases evaporation rate

(E) Answer not known

நீர்நிலைச் சூழலில் வெப்பமாசு ஏற்படுத்தும் பாதிப்புகளில் முதன்மையானதாக அறியப்படுவது?

(A) நீரில் ஆக்ஸிஜனின் அளவு குறைதல்

(B) நீரின் நச்சு அதிகரித்தல்

(C) பயன்பாட்டுக்கு உகந்ததற்றதாக மாற்றுதல்

(D) ஆவியாதலை துரிதப்படுத்துதல்

(E) விடை தெரியவில்லை

17. Activities taken to ensure that the needs of victims are met and suffering is minimised

(A) Emergency response activities

(B) Response and recovery activities

(C) Preparedness activities

(D) Disaster management

(E) Answer not known

பாதிக்கப்பட்டவர்களின் தேவைகள் மற்றும் ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்படுவதையும் துன்பங்கள் குறைக்கப்படுவதையும் உறுதிசெய்ய எடுக்கப்படும் நடவடிக்கைகள்

(A) அவசர கால பதில் நடவடிக்கைகள்

(B) பதில் மற்றும் மீட்பு நடவடிக்கைகள்

(C) ஆயத்த நடவடிக்கைகள்

(D) பேரிடர் மேலாண்மை

(E) விடை தெரியவில்லை

18. Which of the following statements is incorrect with respect to Alluvial Soil?

(A) Frequently inundated by floods during the rainy season

(B) Low nitrogen and varying percentage of calcium carbonate

(C) The colour of the alluvial soils varies from light grey to dark grey

(D) Rich in humus phosphoric acid, lime and organic matter

(E) Answer not known

வண்டல் மண்ணை பொறுத்தவரை பின்வரும் எந்த கூற்று தவறானது?

(A) மழைக் காலங்களில் அடிக்கடி வெள்ளத்தால் மூழ்கும்

(B) குறைந்த நைட்ரஜன் மற்றும் கால்சியம் கார்பனேட்டின் மாறுபட்ட சதவீதம்

(C) மண்ணின் நிறம் வெளிர் சாம்பல் முதல் அடர் சாம்பல் வரை மாறுபடும்

(D) மட்கிய, பாஸ்போரிக் அமிலம், சுண்ணாம்பு மற்றும் கரிமப் பொருட்கள் நிறைந்தவை

(E) விடை தெரியவில்லை

19. Which of the following is the First Smart Tribal Village in Jammu & Kashmir?

(A) Srinagar

(B) Baramula

(C) Habbi

(D) Rajauri

(E) Answer not known

ஜம்மு மற்றும் காஷ்மீரின் முதல் தொழில்நுட்ப (Smart) பழங்குடி கிராமம் கீழ்காண்பவையில் எது?

(A) ஸ்ரீநகர்

(B) பராமுலா

(C) ஹப்பி

(D) ரஜவ்ரி

(E) விடை தெரியவில்லை

20. World's highest Active Volcano is found in

(A) Japan

(B) Italy

(C) Ecuador

(D) Kenya

(E) Answer not known

உலகின் மிக உயர்ந்த செயல்படும் எரிமலை காணப்படும் நாடு

(A) ஜப்பான்

(B) இத்தாலி

(C) ஈக்வடார்

(D) கென்யா

(E) விடை தெரியவில்லை

21. Consider the following statements :

1. Vinod Kumar Shukla was the recipient of the first Mathrubhumi book of the year award
2. He is a Malayalam poet and novelist
3. He translated the book "Blue is like Blue"
4. He won Sahitya Akademi Award in 1999

From the above which are correct?

(A) 1, 2 and 3 are correct

(B) 1, 3 and 4 are correct

(C) 2, 3 and 4 are correct

(D) 1, 2 and 4 are correct

(E) Answer not known

பின்வரும் கூற்றுகளை கருத்தில் கொள்க.

1. வினோத் குமார் சுக்லா மாத்ரு பூமி வருட சிறந்த புத்தக விருதை முதன் முதலில் பெற்றவர் ஆவார்
2. அவர் ஒரு மலையாள கவிதையாளர் மற்றும் நாவலாசிரியர்
3. நீலம் நீலமாக இருக்கிறது என்ற நூலை மொழி பெயர்த்தவர்
4. இவர் 1999-இல் சாகித்ய அகாடமி விருதை பெற்றவர்

மேலே கண்டவற்றுள் சரியானவை எவை?

(A) 1, 2 மற்றும் 3 சரி

(B) 1, 3 மற்றும் 4 சரி

(C) 2, 3 மற்றும் 4 சரி

(D) 1, 2 மற்றும் 4 சரி

(E) விடை தெரியவில்லை

22. The processes by which organisms keep their internal conditions relatively stable is called

(A) Metabolism

(B) Homeostasis

(C) Hypostasis

(D) Epistasis

(E) Answer not known

விலங்குகளின் உள்நிலையை சீராக வைத்திருப்பதற்கு ———————— என்று அழைக்கப்படுகிறது.

(A) மெட்டாபாலிசம்

(B) ஹிமோ ஸ்டாடிஸிஸ்

(C) ஹைப்போஸ்டாடிஸிஸ்

(D) எபிஸ்டாடிஸிஸ்

(E) விடை தெரியவில்லை

23. What is the fibrous sac covering in the heart?

(A) Myocardium

(B) Endocardium

(C) Pericardium

(D) Auriculo cardium

(E) Answer not known

இதயத்தை சுற்றியுள்ள இழையுறை எது?

(A) மையோகார்டியம்

(B) எண்டோகார்டியம்

(C) பெரிக்கார்டியம்

(D) அரிக்குலோகார்டியம்

(E) விடை தெரியவில்லை

24. The Snow on the mountains does not melt all at once when it is heated by the sun because

(A) it has a low specific heat capacity

(B) ✓ it has high latent heat of fusion

(C) it becomes very hard

(D) it reflects most of the heat from the sun

(E) Answer not known

சூரியனின் வெப்பத்தால் மலைகளில் படிந்திருக்கும் பனி ஒரே நேரத்தில் உருகாமல் இருப்பதற்கான காரணம்

(A) அதன் குறைவான வெப்ப ஏற்பு திறன்

(B) அதன் அதிகமான உருகலின் மறை வெப்பம்

(C) அது மிகவும் கடினமாக இருப்பதால்

(D) அது சூரியனிலிருந்து வரும் வெப்பத்தை அதிக அளவு பிரதி பலிப்பதால்

(E) விடை தெரியவில்லை

25. If the earth rotates 17 times faster than its normal speed, then the earth will make one rotation in

(A) One day/24 hours

(B) 5 : 30 hours

(C) ✓ 1 : 412 hours

(D) 3 : 563 hours

(E) Answer not known

பூமி தற்போது சுற்றுவதை விட 17 மடங்கு விரைவாக சுற்றி வருகையில், பூமி ஒரு சுழற்சியினை முடிக்க ஆகும் நேரம்

(A) ஒரு நாள்/24 மணி நேரம்

(B) 5 : 30 மணி நேரம்

(C) 1 : 412 மணி நேரம்

(D) 3 : 563 மணி நேரம்

(E) விடை தெரியவில்லை

26. What will be the next term of the following series $\frac{3}{16}, \frac{1}{8}, \frac{1}{12}, \frac{1}{18}, \ldots$

(A) $\frac{1}{24}$

(B) $\frac{1}{27}$

(C) $\frac{2}{3}$

(D) $\frac{1}{81}$

(E) Answer not known

$\frac{3}{16}, \frac{1}{8}, \frac{1}{12}, \frac{1}{18}, \ldots$ என்ற தொடர் வரிசையின் அடுத்த உறுப்பு

(A) $\frac{1}{24}$

(B) $\frac{1}{27}$

(C) $\frac{2}{3}$

(D) $\frac{1}{81}$

(E) விடை தெரியவில்லை

27. Find the sum of $15^2 + 16^2 + 17^2 + \ldots.. + 28^2$

(A) 9966

(B) 9696

(C) 6969

(D) 6699

(E) Answer not known

$15^2 + 16^2 + 17^2 + \ldots.. + 28^2$ யின் கூடுதல் காண்க.

(A) 9966

(B) 9696

(C) 6969

(D) 6699

(E) விடை தெரியவில்லை

28. How many days are there in $x$ weeks $x$ days?

(A) $7x^2$

(B) $8x$

(C) $14x$

(D) 7

(E) Answer not known

$x$ வாரம் $x$ நாட்களில் எத்தனை நாட்கள் உள்ளன?

(A) $7x^2$

(B) $8x$

(C) $14x$

(D) 7

(E) விடை தெரியவில்லை

29. Two dice are rolled together, find the probability of getting a doublet (or) sum of face as 4?

(A) $\frac{1}{9}$

(B) $\frac{2}{9}$

(C) $\frac{4}{9}$

(D) $\frac{5}{9}$

(E) Answer not known

இரண்டு பகடைகள் ஒரு முறை ஒருசேர உருட்டப்படுகின்றன. முக எண்கள் சமமாக இருக்க அல்லது முக எண்களின் கூடுதல் 4 கிடைக்க நிகழ்தகவு யாது?

(A) $\frac{1}{9}$

(B) $\frac{2}{9}$

(C) $\frac{4}{9}$

(D) $\frac{5}{9}$

(E) விடை தெரியவில்லை

30. A and B together can do a piece of work in 16 days and A alone can do it in 48 days. How long will B take to complete the work?

(A) 6 days

(B) 12 days

(C) 18 days

(D) 24 days

(E) Answer not known

A மற்றும் B ஆகிய இருவரும் இணைந்து ஒரு வேலையை 16 நாட்களில் முடிப்பர். A தனியே அந்த வேலையை 48 நாட்களில் முடிப்பர் எனில், B தனியே அந்த வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?

(A) 6 நாட்கள்

(B) 12 நாட்கள்

(C) 18 நாட்கள்

(D) 24 நாட்கள்

(E) விடை தெரியவில்லை

31. The area of a square and a rectangle are equal. If the side of a square is 40 cm and the breadth of the rectangle is 25 cm, then the length of the rectangle is

(A) 58 cm

(B) 60 cm

(C) 64 cm

(D) 68 cm

(E) Answer not known

ஓர் சதுரம் மற்றும் ஓர் செவ்வகத்தின் பரப்புகள் சமம். சதுரத்தின் பக்கம் 40 செ.மீ, செவ்வகத்தின் அகலம் 25 செ.மீ எனில் செவ்வகத்தின் நீளம்

(A) 58 செ.மீ

(B) 60 செ.மீ

(C) 64 செ.மீ

(D) 68 செ.மீ

(E) விடை தெரியவில்லை

32. In how much time will a sum of Rs. 1,600 amount to Rs. 1,852.20 at 5% per annum compound interest?

(A) 1 year

(B) 2 years

(C) 3 years

(D) 4 years

(E) Answer not known

ரூ. 1,600 ஆனது 5% ஆண்டு கூட்டு வட்டி வீதம் கொண்டு எத்தனை ஆண்டுகளில் ரூ. 1,852.20 ஆகும்?

(A) 1 ஆண்டு

(B) 2 ஆண்டுகள்

(C) 3 ஆண்டுகள்

(D) 4 ஆண்டுகள்

(E) விடை தெரியவில்லை

33. Principal = Rs. 4,000, $r = 5\%$ p.a, $n=2$ years, interest compounded annually

(A) Rs. 320

(B) Rs. 410

(C) Rs. 280

(D) Rs. 450

(E) Answer not known

அசல் = ரூ. 4,000, ஆண்டு வட்டி வீதம் $r = 5\%$, $n=2$ ஆண்டுகள், ஆண்டுக்கொரு முறை வட்டி கணக்கிடப்படுகிறது

(A) ரூ. 320

(B) ரூ. 410

(C) ரூ. 280

(D) ரூ. 450

(E) விடை தெரியவில்லை

34. A heater uses 3 units of electricity in 40 minutes. How many units does it consume in 2 hours?

(A) 4 units

(B) 8 units

(C) 9 units

(D) 7 units

(E) Answer not known

ஒரு சூடேற்றும் சாதனம் 40 நிமிடத்தில் 3 யூனிட்கள் மின்சாரத்தை தண்ணீரை சூடேற்ற எடுத்துக் கொண்டால் இரண்டு மணி நேரத்திற்கு எத்தனை யூனிட் மின்சாரத்தை எடுத்துக் கொள்ளும்?

(A) 4 யூனிட்கள்

(B) 8 யூனிட்கள்

(C) 9 யூனிட்கள்

(D) 7 யூனிட்கள்

(E) விடை தெரியவில்லை

35. If $A:B = 6:12$, $B:C = 9:27$, find the ratio of $A:B:C$?

(A) 2 : 6 : 1

(B) 1 : 2 : 6

(C) 1 : 6 : 2

(D) 2 : 1 : 6

(E) Answer not known

$A:B = 6:12$, $B:C = 9:27$ எனில் $A:B:C$ - ன் விகிதத்தைக் காண்க.

(A) 2 : 6 : 1

(B) 1 : 2 : 6

(C) 1 : 6 : 2

(D) 2 : 1 : 6

(E) விடை தெரியவில்லை

36. If one third of a tank holds 45 litres of water, then find the quantity of water that half of the tank hold is

(A) 90 $l$

(B) 22.5 $l$

(C) 67.5 $l$

(D) 30 $l$

(E) Answer not known

ஒரு தொட்டியில் மூன்றில் ஒரு பங்காக 45 லிட்டர் தண்ணீர் உள்ளது எனில் அத்தொட்டியின் முழுக் கொள்ளளவில் பாதி எவ்வளவு?

(A) 90 லி

(B) 22.5 லி

(C) 67.5 லி

(D) 30 லி

(E) விடை தெரியவில்லை

37. Find GCD of $2x^2 - 18$ and $x^2 - 2x - 3$.

(A) $(x + 3)$ (B) $(x - 3)$

(C) $(x + 1)$ (D) $(x - 1)$

(E) Answer not known

$2x^2 - 18$ மற்றும் $x^2 - 2x - 3$ -இன் மீ.பொ.வ. காண்க.

(A) $(x + 3)$ (B) $(x - 3)$

(C) $(x + 1)$ (D) $(x - 1)$

(E) விடை தெரியவில்லை

38. Which of the means adopted under self-respect movement

(i) Violent protests against upper classes

(ii) Undermine position of Brahmin priests by formalizing weddings without them

(iii) Boycott of temples and places of Brahmin residence

(A) (i) and (iii)

(B) Only (ii)

(C) Only (iii)

(D) All the above

(E) Answer not known

சுய மரியாதை இயக்கம் கீழ்க்கண்டவற்றுள் எதை பின்பற்றியது?

(i) மேல்தட்டு மக்களை எதிர்க்க வன்முறையான போராட்டங்கள்

(ii) பிராமண அர்ச்சகர்களின்றி திருமணங்களை நடத்தி அவர்களுடைய நிலையை குறைத்தது

(iii) கோவில்கள் மற்றும் பிராமணர்கள் வசிக்கும் இடங்களை புறக்கணித்தல்

(A) (i) மற்றும் (iii)

(B) (ii) மட்டும்

(C) (iii) மட்டும்

(D) மேற்கண்ட அனைத்தும்

(E) விடை தெரியவில்லை

39. ——————— memorial girl child protection scheme is being implemented by the Government of Tamil Nadu.

(A) Dr. Muthulakshmi Reddy memorial

(B) Rani Meyyammai memorial

(C) Sivagami Ammaiyar memorial

(D) Ramamirtham Ammaiyar memorial

(E) Answer not known

——————— நினைவுப் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் தமிழக அரசால் ஆரம்பிக்கப்பட்டது.

(A) Dr. முத்துலட்சுமி ரெட்டி நினைவு

(B) ராணி மெய்யம்மை நினைவு

(C) சிவகாமி அம்மையார் நினைவு

(D) ராமாமிர்தம் அம்மையார் நினைவு

(E) விடை தெரியவில்லை

40. Choose the correct district which is rich in Iron Ores in Tamil Nadu?

(A) Ariyalur

(B) Madurai

(C) Salem

(D) Kallakurichi

(E) Answer not known

தமிழ்நாட்டில் இரும்புத் தாதுக்கள் அதிகம் நிறைந்த சரியான மாவட்டத்தைத் தேர்ந்தெடுக்கவும்.

(A) அரியலூர்

(B) மதுரை

(C) சேலம்

(D) கள்ளக்குறிச்சி

(E) விடை தெரியவில்லை

41. The scheduled castes Finance and Development corporations (NSFDC), work for the ____________ development of scheduled caste families.

(A) Political
(B) Social
(C) Education
(D) Economic
(E) Answer not known

பட்டியல் சாதியினர் நிதி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், பட்டியல் சாதியினர் குடும்பங்களின் ____________ மேம்பாட்டிற்கென இயங்குகிறது.

(A) அரசியல்
(B) சமூக
(C) கல்வி
(D) பொருளாதார
(E) விடை தெரியவில்லை

42. Providing nutrition to 'Poor Mothers of Infants' scheme is

(A) Dr. Muthulaxmi Magaperu Thittam
(B) Moovalur Ramamirtham Magaperu Thittam
(C) Anjugam Ammaiyar Magaperu Thittam
(D) Annai Sathiya Magaperu Thittam
(E) Answer not known

கருவுற்ற ஏழை தாய்மார்களுக்கு ஊட்ட உணவு மற்றும் உதவி திட்டம்

(A) டாக்டர். முத்துலெட்சுமி மகப்பேறு உதவித் திட்டம்
(B) மூவலூர் இராமமிர்தம் மகப்பேறு உதவித் திட்டம்
(C) அஞ்சுகம் அம்மையார் மகப்பேறு உதவித் திட்டம்
(D) அன்னை சத்யா மகப்பேறு உதவித் திட்டம்
(E) விடை தெரியவில்லை

43. Match the following :

| Social Reform | | Reformers |
|---|---|---|
| (a) Abolition of Sati | 1. | Ishwarchandra Vidyasagar |
| (b) Temple Entry for Dalits | 2. | Thanthai Periyar |
| (c) Widow Remarriage Act | 3. | Raja Ram Mohan Roy |
| (d) Self respect movement against untouchability | 4. | Ambedkar |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

(E) Answer not known

பொருத்துக

| சமூக சீர்திருத்தம் | | சீர்திருத்தவாதிகள் |
|---|---|---|
| (a) உடன்கட்டை முறை ஒழிப்பு | 1. | ஈஸ்வர்சந்திர வித்யாசாகர் |
| (b) தலித் மக்களுக்கான ஆலய பிரவேசம் | 2. | தந்தை பெரியார் |
| (c) விதவை மறுமண சட்டம் | 3. | ராஜாராம் மோகன் ராய் |
| (d) தீண்டாமைக்கெதிரான சுயமரியாதை இயக்கம் | 4. | அம்பேத்கர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

44. The first Conference of the Justice Party was held at

(A) Coimbatore

(B) Salem

(C) Trichy

(D) Madurai

(E) Answer not known

நீதி கட்சியின் முதல் மாநாடு நடைபெற்ற இடம்

(A) கோயம்புத்தூர்

(B) சேலம்

(C) திருச்சி

(D) மதுரை

(E) விடை தெரியவில்லை

45. 'Ayothi Dasa' founded

(A) Satyashodhak Samaj

(B) Samarasa Veda Sanmarga Sangam

(C) Advaidananda Sabha

(D) Ayyavazhi

(E) Answer not known

அயோத்திதாசரால் தோற்றுவிக்கப்பட்டது எது?

(A) சத்யசோதக் சமாஜ்

(B) சமரச வேத சன்மார்க்க சங்கம்

(C) அத்வைதானந்த சபா

(D) அய்யாவழி

(E) விடை தெரியவில்லை

46. Which of the following statements on Vanchinathan are correct?

(i) He belonged to Travancore state of that time

(ii) He was employed as a forest guard at Punalur

(iii) He was one of the members of Bharata Mata Association

(iv) He was trained in the use of Revolver by Subramania Siva at Pondicherry

(A) (i), (iii) and (iv) are correct

(B) ✓ (i), (ii) and (iii) are correct

(C) (i), (ii), (iii) and (iv) are correct

(D) (ii), (iii) and (iv) are correct

(E) Answer not known

வாஞ்சிநாதனைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் சரியானவற்றை தேர்ந்தெடுக்க.

(i) அவர் அப்போதைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்

(ii) அவர் புனலூரில் வனபாதுகாப்பாளராக பணியாற்றினார்

(iii) பாரத மாதா சங்கத்தின் உறுப்பினர்

(iv) பாண்டிச்சேரியில் சுப்பிரமணிய சிவாவால் துப்பாக்கி சுடும் பயிற்சி பெற்றவர்

(A) (i), (iii) மற்றும் (iv) சரி

(B) (i), (ii) மற்றும் (iii) சரி

(C) (i), (ii), (iii) மற்றும் (iv) சரி

(D) (ii), (iii) மற்றும் (iv) சரி

(E) விடை தெரியவில்லை

47. The meaning of the chapter not Coveting?

(A) Not feeling shy

(B) Not belittling others

(C) Not begging from others

(D) Not desiring others things

(E) Answer not known

'வெஃகாமை' என்ற அதிகாரத் தலைப்பின் பொருள்

(A) வெட்கம் கொள்ளாமை

(B) பிறரை இகழாமை

(C) பிறரிடம் இரந்து வாழாமை

(D) பிறர் பொருள்மேல் ஆசை கொள்ளாமை

(E) விடை தெரியவில்லை

48. 'Sire greatest boon on son confers,...
... to fill the highest seat'
What is the debt of a father to his son according to this Thirukkural?

(A) To amass wealth

(B) To make him a bravest person

(C) Precedence in the assembly of the learned

(D) To give charity

(E) Answer not known

'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி' – எனும் திருக்குறளில் தந்தை மகனுக்குச் செய்யும் கடனாகக் குறிப்பிடப்படுவது

(A) பொருள் சேர்த்து வைத்தல்

(B) வீரனாக உருவாக்குதல்

(C) கற்றவர் சபையில் முந்தி இருக்கச் செய்தல்

(D) தானம் செய்தல்

(E) விடை தெரியவில்லை

49. According to Census 2011 population density of Tamil Nadu is

(A) 550 / sq.km
(B) 555 / sq.km
(C) 560 / sq.km
(D) 565 / sq.km
(E) Answer not known

சென்சஸ் 2011 இன்படி தமிழ் நாட்டின் மக்கள் தொகை அடர்த்தி

(A) 550 / ச.கிமீ
(B) 555 / ச.கிமீ
(C) 560 / ச.கிமீ
(D) 565 / ச.கிமீ
(E) விடை தெரியவில்லை

50. Which book describes the Marriage Manners of the Sankam Age People?

(A) Puranaanuru
(B) Nattrinai
(C) Akanaanuru
(D) Kurunthokai
(E) Answer not known

சங்ககால மக்களின் மணமுறைகளைக் குறிப்பிடும் நூல் எது?

(A) புறநானூறு
(B) நற்றிணை
(C) அகநானூறு
(D) குறுந்தொகை
(E) விடை தெரியவில்லை

51. The seals found in Mohenjadaro was not made of

(A) Ivory
(B) Conch
(C) Faience
(D) Steatite
(E) Answer not known

மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகள் எதனால் செய்யப்படவில்லை?

(A) தந்தம்
(B) சங்கு
(C) சித்திர வேலைப்பாடு செய்யப்பட்ட மட்கலன்
(D) சவர்க்காரம்
(E) விடை தெரியவில்லை

52. The editor of "The Hindustan Review", an English Monthly Magazine, published by the Indian Press in Allahabad

(A) Sachchidananda Sinha
(B) T.M. Nair
(C) Surendranath Banerjee
(D) Hentry Vivian Derozio
(E) Answer not known

அலகாபாத்திலிருந்து இந்தியன் பிரஸ்ஸால் வெளிவந்த ஆங்கில மாத இதழான "இந்துஸ்தான் ரிவிவ்"-வின் ஆசிரியராக இருந்தவர்

(A) சச்சிதானந்த சின்கோ
(B) டி.எம். நாயர்
(C) சுரேந்திரநாத் பானர்ஜி
(D) ஹென்றி விவியன் டேரோசியோ
(E) விடை தெரியவில்லை

53. Who favoured the permanent settlement but urged that the Government should fix the maximum rent to be paid by each cultivator?

(A) Lord Cornwallis
(B) Raja Ram Mohan Roy
(C) Lord Munro
(D) Dada Bhai Nauroji
(E) Answer not known

நிரந்தர நிலவரியை ஆதரித்தும் மற்றும் அரசினால் விதிக்கப்படும் அதிகப்படியான வரியை ஒவ்வொரு தனி நபரே கட்டவேண்டுமென கூறியது யார்?

(A) காரன்வாலிஸ் பிரபு
(B) இராஜா ராம் மோகன்ராய்
(C) மன்ரோ பிரபு
(D) தாதாபாய் நௌரோஜி
(E) விடை தெரியவில்லை

54. Assertion (A) : Justice Party demanded communal representation for non-Brahmins.

Reason (R) : Periyar came out of congress party since his demand for communal representation rejected.

(A) Both (A) and (R) are true and (R) is the correct explanation of (A)

(B) Both (A) and (R) are true but (R) is not the correct explanation of (A)

(C) (A) is true but (R) is false

(D) (A) is false but (R) is true

(E) Answer not known

கூற்று (A) : நீதிக்கட்சி பிராமணரல்லாதோருக்கான வகுப்பு வாரி பிரிதிநிதித்துவத்தை வேண்டியது.

காரணம் (R) : பெரியாரின் வேண்டுதலான வகுப்புவாத பிரதிநிதித்துவம் காங்கிரஸால் நிராகரிக்கப்பட்ட காரணத்தால் பெரியார் காங்கிரஸிலிருந்து விலகினார்.

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி (R) என்பது (A)க்கான சரியான விளக்கமாகும்

(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி ஆனால் (R) என்பது (A) க்கான சரியான விளக்கமல்ல

(C) (A) சரி ஆனால் (R) தவறு

(D) (A) தவறு ஆனால் (R) சரி

(E) விடை தெரியவில்லை

55. Development Financial institutions are

1. IFCI

2. ICICI

3. IDBI

4. UTI

Select the correct answer :

(A) 1 and 2

(B) 3 and 4

(C) 1 and 3

(D) 1, 2, 3 and 4

(E) Answer not known

